2020 மார்ச் 18]

விவசாயம் சார்ந்த தொகுதியாகும். இங்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் படித்து, வேலைவாய்ப்புக்காக சென்னை, பெங்களூரு, கோயம்புத்தூர், திருப்பூர் போன்ற பகுதிகளுக்குச் செல்கின்றனர். கலசப்பாக்கம் வட்டம், தென்மாதிமங்கலம் கிராமம், பர்வதமலை அடிவாரத்தில் அரசுக்குச் சொந்தமான சுமார் 15 ஏக்கர் நிலம் உள்ளது. ஆகவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைத்துத் தர முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு சாத்தியக்கூறு இருப்பின், போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் தொடங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வரும் நிலையில், அந்தப் பகுதியில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களின் விவரம், தொழில் முனைவோர்களின் தேவை போன்றவற்றின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

125—

தொழிற்பயிற்சி நிலையம்

***47325—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி பகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2020 மார்ச் 18

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, சிவகிரி பகுதி அமைந்துள்ள ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டுவரும் இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 16 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட 3,477 இருக்கைகளில், மொத்தம் 1,652 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. மேலும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 சதவீத இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி, பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டத்தின்கீழ், ஈரோடு மாவட்டத்தில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட 288 இருக்கைகளில் 177 இருக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு, 111 இருக்கைகள் காலியாக உள்ளன. இவ்விருக்கைகளே இப்பகுதியிலுள்ள மாணவர்களுக்குப் போதுமானதாக உள்ளதால், மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற உன்னத கோட்பாட்டோடு, இந்தியத் திருநாட்டில் தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழச் செய்து, இன்று வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கின்ற நான் வணங்கும் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடம் நோக்கி வணங்குகிறேன். இன்று அம்மா அவர்களின் வழியிலே, தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாகத் திகழச் செய்து, நல்லாட்சி நடத்திவருகின்ற நல்லாட்சி நாயகன், குடிமராமத்து நாயகன், ஏழைப் பங்காளன், (மேசையைத் தட்டும் ஒலி) புன்சிரிப்பின் மன்னன், எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அவருக்கு உதவியாக, உற்ற துணையாக, தமிழகத்தை முன்னோடி மாநிலமாகத் திகழச்செய்வதற்கு உறுதுணை புரிந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் வணங்குகிறேன்.

2020 மார்ச் 18]

எனது தொகுதிக்குட்பட்ட சிவகிரி பகுதி, இந்தத் தொகுதியினுடைய மையப் பகுதியாகும். இங்கு பாரதியார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி தற்காலிகமாகச் செயல்பட்டு, கிட்டத்தட்ட 12 வகுப்பறைகள் கட்டப்பட்டு, அந்த வகுப்பறைகள் தற்போது காலியாக, எந்தவித பயன்பாடும் இல்லாமல் இருக்கின்றன. சிவகிரி பகுதியின் சுற்றுவட்டாரப் பகுதிகள் எல்லாம் ஏழை விவசாயக் குடும்பங்களைச் சார்ந்த விவசாயிகள் வசிக்கின்ற பகுதிகளாக இருக்கின்றன. சென்னிமலை, காங்கேயம், வெள்ளக்கோவில் ஆகிய பகுதிகள் சிவகிரியின் மையப் பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலிருந்து 40 கி.மீ. தூரம் சென்றுதான் ஈரோடு பகுதியில் தொழிற்பயிற்சி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அரசு இதைக் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதி விவசாயிகளுடைய குழந்தைகள் தொழிற்பயிற்சி பயிலும் விதமாக, இந்த நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்து சிவகிரி பகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழிற்பயிற்சி நிலையம் துவக்குவதற்கு குறைந்தபட்சம் 3 முதல் 5 ஏக்கர் நிலம் தேவைப்படும். இதற்கு தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டத்தின்படி வகுப்பறைகள், பணிமனைகள், நிருவாக அலுவலகக் கட்டடம் போன்றவை கட்டப்பட வேண்டும். அப்பாடத் திட்டத்தின்படி பயிற்சிக்குத் தேவையான புதிய கருவிகள், இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் மத்திய அரசின் அங்கீகாரம் பெறப்பட்டு, மாணவர்களுக்கு NCVT சான்றிதழ் வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம் இருக்கிறது என்று கூறியிருக்கின்றார். துறை ரீதியாக ஆராய்ந்து, அவசியம் ஏற்படின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடம் இருக்கிறது என்றாலும் அதற்கும் மேலாக, தொழிற்பயிற்சி வழங்குவதற்குத் தேவையான equipments வாங்குவதற்கு, அந்தப் பகுதியிலுள்ள கிராம கமிட்டியே முன்வந்து, 'அதைச் செய்து கொடுக்கிறோம்' என்ற உத்தரவாதத்தை வழங்கியுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுகூர்ந்து பரிசீலனை செய்து, இந்த நிதியாண்டிலேயே உரிய ஆணை வழங்கினால், அதற்குத் தேவையான equipments அனைத்தையும் கிராமப் பகுதியிலுள்ள மக்களின் சொந்தச் செலவிலேயே பெற்றுக் கொடுக்கிறோம் என்ற உத்தரவாதத்தையும் கொடுக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறி, இந்த நிதியாண்டிலேயே வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களே கருவிகளை வாங்கித் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு தோராயமாக 100 கோடி ரூபாய் செலவினம் ஆகும். இருந்தாலும், இதைக் கருத்தில்கொண்டு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இடத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]